[25th July 1957

களுக்கு பணம் கிராண்ட்டாகக் கொடுப்பதாக இருந்தால் அதை ஹரிஜன மான்யத்திலிருந்து ஹரிஜன டைரக்டர் மூலமாக கொடுக்கப்படுகிறதா அல்லது அவர்களுக்கு என்று சர்க்கார் தனியாக ஒதுக்கி இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்தால் பின்தங்கியவர்களுக்கும் கொடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: ஹரிஜன ஹாஸ்டல்களில் சக்கிலியர், குறவர் குழந்தைகள் ஆண், பெண்கள் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். பிற்போக்கான சமூகத்தில் மிகவும் பிற்போக்கானவர்கள் இருந்தால் அவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும். அப்படி சக்கிலியர்களிலும் குறவர்களிலும் மிகவும் பிற்போக்கானவர்கள் இருந்தால் அவர்களையும் ஹரிஜன ஹாஸ்டல்களில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கை வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: ஹரிஜனங்களில் எந்த விதமான பாகு பாட்டையும் அரசாங்கம் விரும்பவில்லை. யார் யாரைக் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்குத் தெரியும். அப்படியே எல்லா ஹாஸ்டல்களுக்கும் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM: கிராமங்களில் இருக்கக் கூடிய ஹரிஜன ஹாஸ்டல்களில் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு இடம் கிடைக்கிறது. அதேபோல் நகரங்களில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு அங்கே இடம் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அங்கங்கே இருக்கக் கூடிய ஹரிஜன மாணவர்களுக்கு ஒரு பகுதி கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அப்படி ஒதுக்கிவிட்டு மற்றவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM: ஹரிஜன ஹாஸ்டல்களில் பிற்பட்ட வகுப்பினர்களில் இவ்வளவு சத விகிதத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். சர்க்காரால் நடத்தப்படும் மறவர் ஹாஸ்டலில் ஏன் ஹரிஜனங்கள் சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்க்க வேண்டும் என்று சொல்ல அரசாங்கம் முன்வருமா என்பதைக் கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: எந்தத் தனிப்பட்டவர், எந்தத் தனி ஜாதியார் நடத்தும் ஹாஸ்டல்களிலும் ஹரிஜனங்களில் இவ்வளவு பேர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது விவகாரங்கள் இருந்தால் அதைப் பற்றி கவனிக்கப்படும்.

SRI T. S. RAMASWAMY PILLAI: 225 ஹாஸ்டல்களை நடத்திவருவதாக கனம் அமைச்சர் கூறினார். கன்னியாகுமரி ஜில்லாவில் ஏதாவது ஹாஸ்டல்கள் திறக்கப்பட்டிருக்கிறதா? அங்குள்ள ஹரிஜன மாணவர்களுக்கு. என்ன உதவி செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: கன்னியாகுமரி ஜில்லா சென்னையுடன் இணைக்கப்பட்ட பிறகு இரண்டு ஹாஸ்டல்களை 1957–58-ல் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Assistant Government Pleader's post in Kanyakumari district

* 244 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish the Assistant Government Pleader's post in Kanyakumari district; and

25th July 1957]

(*b*) whether the Government have taken any steps to give help to the advocates of the ex-Travancore-Cochin State High Court belonging to the Kanyakumari district to get themselves enrolled in the Madras High Court?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Such a proposal was considered in connection with the reorganization of the set up of Law Officers in the district, but according to the orders issued in the matter, the post is being continued temporarily under a different designation, viz., " Public Prosecutor ".

(*b*) The answer is in the affirmative.

Kuzhithurai Drinking Water Scheme in Kanyakumari district.

* 245 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total cost of the Kuzhithurai Drinking Water Scheme in Kanyakumari district; and

(*b*) whether the Government propose to take up this scheme for execution in the current year?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rupees 6·7 lakhs.

(*b*) The question of drawing up a list of water-supply schemes to be taken up in the Kanyakumari district during the remaining years of the Second Five-Year Plan period is under consideration.

SRI A. NESAMONY : அங்கே கம்யூனிடி டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் அதிகாரிகள் இந்தத் திட்டத்தைப் பரிசிலனை செய்து கவர்ன்மெண்ட்டுக்கு சமர்ப்பித்து அந்தத் திட்டங்களில் ஏதாவது இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா ? அதற்கு டெக்னிகல் சாங்ஷன் கொடுத்து அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன் மாத்திரம் கொடுக்க வேண்டி இருந்ததாக தெரியவருகிறது. அந்தத் திட்டம் இந்த பிரதேசத்தில் உண்டா என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது இப்போது எனக்குத் தெரியாது. அங்கே முன்பு இருந்த அரசாங்கத்தினுடைய திட்டம் அது. அது அங்கே இருக்கக் கூடிய ஜில்லா கலெக்டரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அவர் ரிபோர்ட் அனுப்பும்போது அதைப் பற்றி விவரங்கள் எல்லாம் வரும்.

SRI A. NESAMONY : இந்த கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் அதிகாரிகள் எவ்வளவோ திட்டங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இந்த அரசாங்கத்தினிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது கலெக்டரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப் பற்றிச் சொல்வதற்கு எனக்கு நோட்டீஸ் வேண்டும்.

SRI T. T. DANIEL : Sir, are the Government aware that this scheme was completely investigated by the erstwhile Travancore-Cochin State, that it was recommended to the Planning Commission, that it was finally dropped and also that it is now ripe for execution?